**தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 139,800 இடர் கடன் மீதி காணப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் 2022 திசெம்பர் 30 ஆம் திகதி திணைக்களத்தில் இருந்து கேட்டு விலகியிருந்தார். அந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை முழுமையாக அறவிடாமல் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய மீதியில் உள்ளடக்கிய பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது. கடன் மீதியை அறவிடாமைக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாகவும் மற்றும் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயகத்தின் 4.5 மற்றும் 6.3 ஆம் பந்திகளின் பிரகாரம் இது வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 சனவரி 01 ஆம் திகதி கடிதம் மூலம் உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2023 மார்ச் 07 ஆம் திகதி நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்குமாயின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுவதுடன், கேட்டு விலகியமை திணைக்களத்தினால் இது வரை அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் கடன் மீதியை தீர்த்து வைக்காமை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | முற்பணம் ‘‘பீ’’ கணக்கு இணக்கக் கூற்றின் இணைப்பு 3.7 இன் கீழ் காண்பிக்கப்பட்ட சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரின் விபரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அலுவலக உதவியாளர் ஒருவர் 2021 ஆகஸ்ட் 11 ஆம் திகதி பதவியை கைவிட்டுச் சென்றிருந்ததுடன், அது வரையிலும் அந்த உத்தியோகத்தாரின் இடர் கடன் ரூபா 229,997 மற்றும் விஷேட முற்பணம் ரூபா 1,585 ஆக மொத்த கூட்டுத் தொகை ரூபா 231,582 திணைக்களத்திற்கு அறவிட வேண்டியிருந்தது. எனினும், இணைப்பு 3.7 இன் காலப் பகுப்பாய்வில் காண்பிக்கப்பட்ட அந்த மீதி 0 – 3 மாதங்களுக்கு இடையில் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியாக இருந்த போதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த உத்தியோகத்தர் சேவையை விட்டுச் சென்று ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. அதன் பிரகாரம் கடன் மீதிகளின் காலப் பகுப்பாய்வு பிழையாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், முற்பணம் ‘‘பீ’’ கணக்கு இணக்கக் கூற்றில் 3.7 இணைப்பில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் பிழையானதாகும். அவ்வாறே அறவிடப்படாது காணப்படுகின்ற அந்த கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 6.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதற்கு முன்னர் சேவையாற்றிய திணைக்களத்தில் இருந்து கடன் மீதியை கையேற்றல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் உத்தியோகத்தரின் கடன் கோவை காணப்படவில்லை. 2022 மார்ச் 10 ஆம் திகதிய கடிதம் மூலம் 2022 ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு முன்னர் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக 2023 மே 10 ஆம் திகதி மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்குமாயின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய கடன் மீதி அறவிட வேண்டியிருந்ததுடன், அது தொடரபான விபரங்கள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ‘‘பீ’’ கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றில் இணைப்பு 3.1 இல் காண்பிக்கப்படுகின்ற திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை காண்பிக்கின்ற பட்டோலை, அங்கத்தவர் கடன் பதிவேடு (CC10) ஆக தயாரிக்கப்படாமையினால் பட்டோலையில் காண்பிக்கப்பட்ட சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 68,678,013 ஆன தனிப்பட்ட கடன் மீதிகளை பரீட்சித்து சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது. | அங்கத்தவர் கடன் பதிவேடு (சீசீ10) ஒழுங்கு முறையாக பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமையால் 02 வருட காலங்களுக்காக பயன்படுத்தக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த காலப் பகுதியில் இடம் மாற்றலாகி வருகை தந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர் தொடர்பாக சில வேலைகளில் சீசீ10 பதிவேடுகளில் இடப்பட்டுள்ள இட அளவு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் நடைமுறை ரீதியில் இந்த பிரச்சினையான நிலைமை தோன்றியிருந்தது. எனினும், சீசீ10 இல் காண்பிக்கப்படுகின்ற கடன் மீதி 3.1 இணைப்புடன் ஏற்றுக்கொள்கின்றோம். | இணக்கக் கூற்றில் இணைப்பு 3.1 இல் காண்பிக்கப்படுகின்ற திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை காண்பிக்கின்ற பட்டோலை, அங்கத்தவர் கடன் பதிவேடுகளுக்கு நேரொத்ததாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலக்கம் 6000-0–0-16-0-47 வைப்புக் கணக்கின் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 2,943,234 ஆன வைப்புக்கள் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 105,439 வைப்புக்கள் என்பன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | தவறின் காரணமாக ரூபா 105,439 வைப்புக்கள் 2 – 5 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த வைப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த தவறை சரிசெய்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வைப்புக்கள் தொடர்பாக சரியான காலப் பகுப்பாய்வொன்று தயாரித்து வைப்புக்களின் இணக்கக் கூற்றை தயாரிக்க வேண்டியிருந்ததுடன், 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை மீள செலுத்துவதற்கோ அல்லது உரிமை கோரப்படாதிருக்குமாயின் அந்த மீதியை அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலக்கம் 6000-0–0-13-0-69 என்ற பொது வைப்புக் கணக்கின் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 2 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையில் ரூபா 15,419,389 ஆன வைப்புக்கள் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,950,594 ஆன வைப்புக்கள் என்பன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகளை எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தால் வைப்புக்கள் தொடர்பாக சரியான காலப் பகுப்பாய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன், 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை மீள செலுத்துவதற்கோ அல்லது உரிமை கோரப்படாதிருக்குமாயின் அந்த மீதிகளை அரசாங்கத்தின் வருமானத்திற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கை வழிகாட்டியின் இலக்கம் 03 இன் மாதிரிப் படிவம் 03 இல் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் காணப்படுவதற்கான காரண விடயங்கள் மற்றும் அதற்குரிய பெறுமதிகள் தனித்தனியாக குறிப்பிட வேண்டிய போதிலும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொது வைப்பு இணக்கக் கூற்று மேற்கூறப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த மாதிரி படிவங்களின் பிரகாரம் வைப்பு இணக்கக் கூற்று தயாரிப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வைப்பு இணக்கக் கூற்று 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தனித்தனியாகவும் அதற்கான காரண விடயங்களுடனும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iv) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்பு மீதிகளின் கூட்டு மொத்தமான ரூபா 103,152,800 இற்காக வைப்புக்களின் ஆண்டுகளின் பிரகாரம் தனிப்பட்ட மீதி நிரலொன்று திணைக்களத்தால் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், அதன் காரணமாக வைப்பு மீதிகளின் இருப்பு மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது. | வைப்பு மீதிகளின் தனிப்பட்ட மீதி நிரலொன்றை தயாரித்து பேணிச் செல்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வைப்பு மீதிகளின் தனிப்பட்ட மீதிகளின் மீதி நிரலொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான 31 மாவட்ட மீன்பிடி அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் 14 அலுவலகங்கள் அமைந்துள்ள காணிகளை எல்லையை சரியாக இனங்கண்டு வேலி எல்லை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதும், அந்த மாவட்ட அலுவலகங்கள் அமைந்துள்ள காணிகளை வேலி எல்லை அமைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட காணி இந்த திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டதன் பின்னர் வேலி எல்லை அமைக்க முடியுமாக இருந்ததுடன், அந்த அலுவலகங்கள் அமைந்துள்ள காணிக்காக பிரதேச செயலாளர்களினால் வழங்கப்படுகின்ற சட்ட ரீதியான உரித்து சான்றிதழ் கையளித்தல் சான்றிதழ் மாத்திரமாக இருந்தமையால் அந்த காணிகள் திணைக்களத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், காணிகளை சரியாக இனங்கண்டு வேலி எல்லையை அமைத்தல் வேண்டும். |

**(ஈ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **மின்சார துணைப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட்பதிவேடு**<br>நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார துணை உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளை பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் கட்டிடங்களில் சகல மின்சார துணைப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) | **புத்தகங்களின் பெயர் பட்டியல்**<br>நிதி பிரமாணம் 454(3) இன் பிரகாரம் புத்கங்களின் பெயர்ப் பட்டியல் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டை பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | புத்தகங்கள் மற்றும் ஏனைய பெறுமதியான வெளியீடுகளுக்காக தனிப்பட்ட பதிவேடு வைக்கப்படல் வேண்டும். |
| (iii) | **வாகன நிரற்படுத்தல் பதிவேடு**<br>நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தல் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டை பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வாகன நிரற்படுத்தல் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு**<br>நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டை பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் தினந்தேறும் பரீட்சிக் கூடிய வகையில் பொருட் பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் குறிப்பிடப்பட வேண்டும். |

**(உ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பதவி அணியினர், தகவல் உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட பெறுகைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதலின் செயல்முன்னேற்றம் போன்ற விபரங்கள் கணக்காய்விற்கு சுமர்ப்பிக்கப்படாமையினால் உரிய துறைகளில் சரியான கணக்காய்வை மேற்கொள்ள முடியாதிருந்தது. | விபரங்கள் எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வினால் கோரப்பட்டுள்ள தகவலகள் விரைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | இலங்கை உவர்நீர் மற்றும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளில் மீன் விளைச்சலை அதிகரிப்பதற்கான பங்களிப்பிற்காக மீன்பிடி நடவடிக்ககைளில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்காக இலங்கை வங்கியின் அனுசரணையின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது தியவர திரிய கடன் முன்மொழிவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,083,390,188 ஆன கடன் தொகைக்காக வட்டி மானியமாக ரூபா 25,044,774 தொகை மீன் பிடி திணைக்களத்தால் இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் பணம், தவணைப் பணத்தை மீண்டும் அறவிடல், அறவிடப்பட்ட வட்டி, கடன் அறவிடப்படாத மீனவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், கடன் நலனாளிகளினால் மீன் அறுவடையை அதிகரிப்பதற்கான பங்களிப்பு தொடர்பான எந்தவொரு தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த முன்மொழிவு திட்டத்தின் கீழ் வங்கி கணக்கு வழங்குதல் ஆதனங்களை பாதுகாக்கும் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமையால் இது தொடர்பாக எந்தவொரு பிரச்சினையும் எழுந்திருக்கவில்லை. மேலும், மீன்பிடி விளைச்சலை அதிகரிப்பதற்கு பங்களிப்பு தொடர்பாக நேரடியாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்படாதிருந்த போதிலும், இடையிடையே இது தொடர்பாக கண்டறியும் போது வெளிநாட்டு சந்தைக்காக மூலப் பொருளாக உயர் தரத்தில் மீன்களை அதிகரிக்கும் அளவு மற்றும் தரத்தில் கூடிய இந்த மீன் பிடி படகுகளின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையொன்று மேற்கொள்ளும் தேவையொன்று கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்டதுடன், எதிர்காலத்தில் அதனை மாவட்ட உதவி பணிப்பாளர்கள் மூலம் அதனை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மீனவர்களுக்காக வழங்கப்பட்டிருந்த கடன், கடன் தவணை மீள அறவிடல், அறவிடப்பட்ட வட்டி, கடன் அறவிடப்படாத மீனவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கடன் நலனாளிகளினால் மீன்பிடியை அதிகரிப்பதற்காக பங்களிப்பு தொடர்பான தகவல்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 7002-0-0-257-0-22 என்ற கட்டு நிதி கணக்கில் மீளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதி ரூபா 1,053,542,000 ஆக இருந்த போதிலும், திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 513,882,000 ஆகும். அதனால் கட்டு நிதி திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட மீன்பிடி துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளை ஊக்குவித்தல், உள்நாட்டு மறறும் வெளிநாட்டு சர்வதேச கடனில் மீன் வளத்தை கண்டறிவதற்காக புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், சர்வதேச நியமங்களுக்கு இணங்க ஏற்றுமதி செய்யப்படுகின்ற மீன்களின் உற்பத்திய் தரம் மற்றும் பாதுகாப்பு இன்மை, சர்சதேச விஞ்ஞாபனம் மற்றும் பிராந்தியத்தில் ஏற்றுக் கொள்ளல்களுக்கு இணங்க மீன்பிடி செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பின்னர் மீன்களில் ஏற்படுகின்ற சேதங்களை குறைத்தல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்திகளின் தரத்தன்மையை அதிகரித்தல் போன்ற பிரதான நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டை திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்படுத்த முடியாதிருந்தது. | திணைக்களத்தின் உள்படியான தேவையை அடிப்படையாகக் கொண்டு கட்டுநிதி திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், கட்டுநிதி பற்றாக்குறை மற்றும் செலவின முகாமைத்துவத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | சரியாகவும் பொருத்தானதாகவும் கட்டுநிதி திட்டத்தை தயாரித்து திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் 2023 பெப்ரவரி 10 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த இலக்கம் 10.03.07.06 என்ற வருமான தலைப்பிற்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் ரூபா 3,503,339 நிலுவை | இது 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான DFAR/F/4/1/Department/ Rev/2022/2023 என்ற கடிதத்தின் பிரகாரம் நிலுவை வருமானமாக காண்பிக்கப்பட்ட ரூபா 3,503,339 தொகை உரிய கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரத்தை புதுப் பிக்கும் கட்டணமாக | நிலுவை வருமானத்தை குறித்துரைத்த படிவங்களின் பிரகாரம் உள்ளடக்கி சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப் பத்திர வருமானம் காணப்பட்ட போதும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ1(i)) பிழையாக அது ரூபா 11,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | அறவிடுவதற்காக தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமனி பத்திரத்தின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்படாமையினால் நிலுவை வருமானமாக திணைக்களத்திற்கு முன்கொண்டு எதிர்காலத்தில் அறவிடுவதற்கான இயலுமை காணப்படாம வருமானம் ஆகும். அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டு முடிவடைந்ததன் பின்னர் அந்த ஆண்டிற்குரிய நிலுவை வருமானமாக அறவிட முடியாமையினால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-1(i)) இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 266,000 தொகையும், 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 8,494,000 தொகையும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 8,760,000 நிலுவை வருமானம் ஒன்று காணப்பட்டதுடன், 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக நிலுவை வருமானம் முறையே ரூபா 99,000 மற்றும் ரூபா 48,000 ஆக கூட்டுப்பெறுமதி ரூபா 147,000 மாத்திரம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டமையினால் நிலுவை வருமானத்தை அறவிடும் செயல் முன்னேற்றம் 1.67 சதவீதமான மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டு மொத்த நிலுவை வருமானம் ரூபா 9,916,000 ஆனமையால் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக போதியளவான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த நிலுவை வருமானத்தை அறவிடும் கப்பல்களை பதிவு செய்தல் மற்றும் மீன்பிடி உபகரண வழங்குனர்களை பதிவு செய்வதற்கு உரியதாகும். எனினும், இந்த நிலுவை வருமானத்தில் ரூபா 8,325,500 நிலுவை வருமானமாக அறவிட முடியாதிருந்ததுடன், அது தொடர்பாக அரச நிதி திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட 2023 பெப்ரவரி 28 ஆம் திகதிய MOF/F/1/7/21/DFAR ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உள்ளபடியான நிலுவை வருமானமாக ரூபா 407,500 தொகையில் ரூபா 147,000 அறவிடப்பட்டுள்ளதுடன், மிகுதி நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக போதியளவான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 1996 இன் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் பிரகாரம் மீன்பிடி அமைச்சரால் தயாரிக்கப்பட்டு 2021 நவம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 2255/22 | திணைக்களத்தின் சகல பிரிவுகளின் மூலமும் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரம் மற்றும் சேகரிக்கப்படுகின்ற வருமானம் மாதாந்தம் ஒப்பீடு செய்யப்படுகின்றது. அதன் | அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்காக போதியளவான உள்ளக கட்டுப்பாடு அமுல்படுத்தப்படல் வேணடும். |

| | | | |
|---|---|---|---|
| | என்ற அதி விஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் அதில் i ஆம் பட்டோலையில் இருந்து iv ஆம் பட்டோலை வரை குறிப்பிடப்பட்ட திருத்தப்பட்ட அனுமதி பத்திர கட்டண தொகுதிகள் 53 இற்குரியதாக மீளாய்வாண்டில் ரூபா 185,602,364 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அனுமதிப் பத்திரம் விஷேடமான கடதாசி, முறையான மாதிரி படிவம் மற்றும் முன் இலக்கங்களுடன் அனுமதிப் பத்திரத்தை முறைகேடாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான சந்தர்ப்பங்களை தடுக்கும் வகையில் வருடாந்த அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரகாரம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்காதிருந்த அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் குறைப்பதற்காக ஆகக் கூடிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால் இந்த நிலைமையை மேலும் முறைமைப்படுத்துவதற்காக தகவல் தொழில் நுட்ப முறைமையும் ஈடுபடுத்தப்பட்டு Payment Gateway திட்டத்தை ஸ்தாபிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 177(1) இன் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற மொத்த பணமும் நாள்தோறும் அல்லது இயலுமான வரை கூடிய விரைவில் வங்கிக்கு வைப்புச் செய்ய வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும், மீன்பிடி மற்றும் நீர் வழங்கல் திணைக்களத்தின் 05 மாவட்ட அலுவலகங்களில் 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,599,973 தொகையான நாளாந்த வருமானம் கணக்கீடு செய்யும் போது 01 முதல் 04 வரையான கால தாமதம் காணப்பட்டது. | திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள் யாவற்றிலும் தினமும் பிற்பகல் 3.00 மணி வரை பணம் சேகரித்தல் மேற்கொள்ளப்படுகின்ற மையால் அந்த வருமானங்கள் வங்கியில் இடல் நடைமுறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. எனினும், நிதிப் பிரமானம் 177(1) இன் பிரகாரம் சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் பணம் அத்தினமே அல்லது இயலுமான வரை கூடிய விரைவில் வங்கியில் இடுமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மொத்த பணமும் நாள்தோறும் வங்கியில் இடப்படல் வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 02 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12,300,000 ஆன மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 9,089,081 நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 54 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கு | 290-1-1-5-2202-0/11 செலவின தலைப்பில் மீனவர்களுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித் திட்டமாகும். நாட்டில் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடியின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் துறைகளுக்கு பிரதேசங்களுக்கு அறிவித்தல் நிகழ்ச்சித் திட்டங்களை | சரியானதாகவும், பொருத்தமானதாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இடையிலான சதவீதத்தை கொண்டிருந்தது. | நடாத்துவதற்கு முடியாதிருந்தது.<br><br>290-1-1-2506-0/11 ஆண்டில் காணப்பட்ட கடுமையான எரிபொருள் பற்றாக்குறை மற்றும் கோட்டா முறைமையில் எரிபொருள் விநியோகித்தமையால் தெற்கு கடற்பரப்பில் இருந்து வடக்கு கடல் வரை போக்குவரத்து நடவடிக்கைகள் மற்றும் தரையிறக்கல் முதல் வாகனத்திற்கு எடுத்துச் செல்லுதல் வசதியீனமற்றிருந்தமையால் ஆண்டில் ஆரம்பம் முதல் மூன்று காலாண்டிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (iii) படிவத்தின் பொறுப்புக்கள் மீதி ரூபா 6,735,774 ஆக இருந்ததுடன், திறைசேரி கணனி அச்சிடல் SA 92 அறிக்கையின் பிரகாரம் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக்களின் மீதி ரூபா 64,605,199 ஆகும். இதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்களின் விபரம் மற்றும் திறைசேரி பொறுப்புக்களுக்கு இடையே ரூபா 57,869,425 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தால் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட ரூபா 57,869,425 பெறுமதியுடைய பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (iii) படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது பொறுப்புக்கள் அறிக்கையில் பெறுமதி SA 92 அறிக்கையில் பெறுமதி மற்றும் ஒப்பீட்டு ரீதியில் சரியான அறிக்கை பேணிச் செல்லுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் யாவும் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (iii) படிவத்தில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி கணனி அச்சிடல் SA 92 அறிக்கை கடப்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (iii) பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் கடப்பாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தால் இனங்கணாப்பட்ட கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (iii) பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் கடப்பாட்டின் கீழ் இனங்காணப்படல் வேண்டும். |
| (இ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்ட செலவின விடயமொன்று அல்லது அது அல்லாத இலக்கம் 290-1-1-0-1504-11 என்ற செலவின விடயத்தின் கீழ் ரூபா 1,425,433 பொறுப்பு காண்பிக்கப்பட்டிருந்தது. | இது கடற்றொழில் திணைக்களம் மற்றும் இலங்கை வங்கி ஒன்றிணைந்து மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கான வட்டி செலுத்துதல் மற்றும் தொடர்புடையதாகும். | வருடாந்தம் பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட செலவின விடயங்களை சரியான நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் காண்பித்தல் வேண்டும். |
| (ஈ) | தியவர திரிய கடன் உத்தேச திட்டத்தின் கீழ் உவர்நீர் மீன்பிடி மக்களுக்கு வழங்கப்பட்ட கடனுக்காக 2022 ஒக்டோபர், நவம்பர், திசெம்பர் மாதங்களில் செலுத்த வேண்டிய மானியமான ரூபா 3,955,536 ஆன பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தால் ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**2.5 முற்பணம் விநியோகித்தல் மற்றும் தீர்த்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 371(4) இன் பிரகாரம் குறித்துரைத்த மற்றும் தேவையற்ற பணிகளுக்காக உப கட்டுநிதி வழங்காதிருக்க வேண்டியமை குறிப்பிடப்பட்ட போதிலும், 06 சந்தர்ப்பங்களின் போது பிரதான அலுவலகத்தால் வழங்கப்பட்ட ரூபா 80,277 சில்லறைக் காசு உப கட்டுநிதி மற்றும் செயல்நிமித்த உப கட்டுநிதி எந்தவொரு பணிகளுக்காகவும் ஈடுபடுத்தப்படாமல் 04 நாட்கள் முதல் 11 மாதங்கள் வரையான கால வீச்சில் நிறுத்தி வைக்கப்பட்டு மொத்த பணமும் மீள வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | இதில் குறிப்பிடப்பட்ட உப கட்டு நிதி செலுத்துதல் யாவும் தற்போது பணமாக அல்லது உறுதிச் சீட்டுக்கள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. | தேவையான பிரகாரம் கட்டு நிதி வழங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமானம் 371(5) இன் பிரகாரம் உப கட்டுநிதி வழங்கப்பட்டதன் பின்னர் உரிய பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி மீண்டும் தீர்க்க வேண்டியிருந்த போதிலும், மீன் பிடி மற்றும் நீர் வழங்கல் திணைக்களம் 2022 ஆம் ஆண்டில் வழங்கியிருந்த உப கட்டு நிதி தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் உப கட்டுநிதிகளை தீர்ப்பதற்காக 16 நாட்கள் முதல் 115 நாட்கள் வரையான கால வீச்சினை எடுத்திருந்தது. | உரிய பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் கட்டுநிதியை தீர்க்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உப கட்டுநிதியை தீர்த்தல் குறித்துரைத்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 290-1-1-2001 மூலதன சொத்துக்களை புணரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் கீழ் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களுக்காக ரூபா 5,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், பின்னர் நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் மேலும் ரூபா 281,000 இனால் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 5,200,000 கட்டிட நிர்மாணம் மற்றும் புணரத்தைல் மற்றும் அபிவிருத்தி செய்வத்றகாக திட்டமிடப்பட்டிருந்தது. திறைசேரியில் அச்சிடல் குறிப்பின் SA 10 இன் பிரகாரம் மேற் கூறப்பட்ட செலவின விடயத்தில் செலவினம் ரூபா 5,240,360 ஆக இருந்ததுடன், அது அந்த நிதி ஏற்பாடு 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட புணரமைப்பு மற்றும் கட்டிட நிர்மாணத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், செலுத்தப்படாத பட்டியல்கள் தீர்ப்பதற்கு ஆகும். அதன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு மற்றும் பெறுகைத் திட்டம் இணங்கியிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி சார் செயல் முன்னேற்றம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயல் முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 3.2 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (i) நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட அமைச்சின் கட்டிடத்தில் 06 ஆவது மாடியில் நீர் கசிவு ஏற்பட்டமையினால் ஏற்பட்டிருந்தது, ரூபா 16,519,961 இழப்பு திணைக்களத்தினால் பேணிச் செல்லப்பட வேண்டிய இழப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டடிருக்க வில்லை. அதன் பிரகாரம் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்தவர் ஒப்பந்தகாரராக இருந்தமை தெளிவாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீன்பிடி அமைச்சின் கட்டிடம் நிர்மாணிக்கும் பணிகளினால் 6 ஆவது மாடியில் நீர் கசிவு ஏற்பட்டமையினால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு 2023 ஏப்ரல் 24 ஆம் திகதி 03 உத்தியோகத்தர்களை உடைய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தால் பேணிச் செல்லப்படுகின்ற நட்டம் தொடர்பான பதிவேட்டில் அறிக்கையிடப்பட்ட இழப்பு மற்றும் 06 நட்டங்கள் தொடர்பான விபரங்கள் முழுமையாக நாளது வரையாக்கப்படாதிருந்ததுடன், அந்த இழப்பு மற்றும் நட்டங்கள் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (i) இல் நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் தொடர்ந்தும் அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ அல்லது கைவிடுவதற்கோ உள்ள நட்டம் தொடர்பான கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | அந்த இழப்பு மற்றும் நட்டங்கள் 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்டதாகும். அந்த வாகன விபத்து அவ்வப்போது இழப்பு தொடர்பாக பதிவேட்டில் பதிவழிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தால் பேணிச் செல்லப்படுகின்ற இழப்பு தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும். |